உத்தரவிட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆதி-திராவிடர்கள் மற்றும் ஜாதி இந்துக்கள் என்றோ அல்லது உயர்ஜாதி இந்துக்கள் என்றோ குறிப்பிடக்கூடாது என்று நான் தெளிவாக ஆணையிட்டு அதற்கு மாறாக ஆதி-திராவிடர்களும் மற்ற ஜாதியினரும் என்றுதான் குறிப்பிட வேண்டுமென்று அவ்வளவு ஆணித்தரமாக உத்தரவிட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் சுப்பிரமணியன் சுவாமி போன்ற ஒருவர், ஒரு மத்திய அமைச்சருக்குச் சமமான அந்தஸ்து வகிக்கும் ஒருவர் இப்படி நாடெங்கிலும், வாழும் ஆதி திராவிட மக்களை, தாழ்த்தப்பட்ட மக்களை இழிவுபடுத்துகின்ற, கேவலப்படுத்துகின்ற வகையில் பேசியிருப்பதை இந்த அரசு மிகவும் கவனமாக எடுத்துக் கொண்டுள்ளது. இதன்மீது அரசு, சட்டத்தின்படி தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படிப்பட்டவர்களுக்கு நாட்டு மக்களும் சரியான தண்டனை தருவார்கள் என்றே நம்புகிறேன்.

5. கவன ஈர்ப்பு

போளூர் வட்டம், வாழியூர் கிராமத்திற்கு சில பேருந்துகள் நிறுத்தப்பட்டதால் மக்கள் படும் அவதி குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. தா. வேடியப்பன் அவர்கள் அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. தா. வேடியப்பன்.

**திரு. தா. வேடியப்பன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “போளூர் வட்டம் வாழியூர் கிராமத்திற்கு தடம் எண்22 மற்றும் 24 பேருந்துகள் 2 நாட்களாக நிறுத்தப்பட்டு இருப்பதால் மக்கள் படும் அவதி குறித்த” அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையின் முன் வைக்கப்பெற்றிருக்கிறது.

அறிக்கை

பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தால் வேலூரிலிருந்து வாழியூருக்கு இயக்கப்படும் 22 மற்றும் 24 நகரத் தடங்கள் 200 மீட்டர் தூரத்திலுள்ள சின்னபுத்தூர் கிராமத்திற்கு நீட்டிக்கக்கோரி வற்புறுத்தி 26-3-1995 அன்று சின்னப்புத்தூர் கிராம பொதுமக்களால் பஸ் மறியல் செய்யப்போவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக ஆரணி வட்டாட்சியர் அவர்களால் 25-3-1995 அன்று பிற்பகல் 2.00 மணிக்கு ஆரணி தாலுக்கா அலுவலகத்தில் ஆரணி வட்டாட்சியர் தலைமையில் சமாதனக் குழு கூட்டம் நடைபெற்றது.

(2) மேற்படி கூட்டத்தில் ஆரணி வட்டாட்சியர், காவல் துறை ஆய்வாளர், கண்டமங்கலம் காவல் நிலையம், பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழக அலுவலர்கள் மற்றும் சின்னபுத்தூர் கிராமப் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். அக்கூட்டத்தில் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படும் மேற்படி 2 நகர தடங்களில் (22,24) தடம் எண் 24-ஐ மட்டும் 29-3-1995 முதல் சின்னபுத்தூருக்கு நீட்டிப்பது என்று முடிவுவெடுக்கப்பட்டது.

(3) மேற்கண்ட முடிவிற்கிணங்க பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகப் பேருந்து தடம் எண் 24-ஐ வாழியூர் கிராமத்தை அடுத்துள்ள சின்னபுத்தூருக்கு இயக்க முயன்றபோது வாழியூர் கிராம மக்கள் வாழியூர் கிராமத்தைக் கடந்து பேருந்து செல்லக்கூடாதென சாலையை மறித்து பேருந்தை நிறுத்திவிட்டார்கள். அதற்குப்பிறகு, சின்னபுத்தூர் கிராம மக்கள் வாழியூருக்கு முன் உள்ள ஆண்டிப்பாளையத்தில் பேருந்தை மறித்து வாழியூர் செல்லவிடாமல் பேருந்தை நிறுத்திவிட்டனர். இதற்கிடையில் சட்டம், ஒழுங்குப் பிரச்சினை ஏற்பட்டுவிட்டதால், ஆரணி வட்டாட்சியர் அவர்களின் அறிவுரையின் பேரில், பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழக பேருந்துத் தடங்கள் 22 மற்றும் 24 ஆகிய இரண்டு பிரதான சாலையிலுள்ள வண்ணான்குளம் கிராமத்துடன் நிறுத்தப்பட்டுள்ளது.

(4) இரு கிராம மக்களிடையே சமரச உடன்பாடு ஏற்பட்டபிறகு மீண்டும் வாழியூர் வரை பேருந்து இயக்க பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் தக்க நடவடிக்கைகளை எடுக்கும்.

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே வைக்கப்பட்டுள்ள அறிக்கையை பார்த்தேன். இந்தப் போக்குவரத்து ஏறத்தாழ 20 நாட்களாக இயங்கவில்லை. இரண்டுமுறை ஆரணி வட
அவர்களும், திருவண்ணாமலை ஆர்.டி.ஓ. அவர்களும், இரண்டு கிராம

மக்களையும் அழைத்துப் பல முறை உடன்படிக்கை செய்திருக்கிறார்கள். இருப்பினும், இவர்களுக்குள், பல நாட்களாகவே, ஏறத்தாழ ஓராண்டு காலமாகவே, இயற்கையாகவே இரண்டு கிராமங்களுக்கும் அடிப்படையாக கருத்து வேறுபாடுகள் இருந்து வருகிறது. இருப்பினும், நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் வேலூர் வருகை தந்தபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேரமாகிவிட்டது. கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 24 நெம்பர் பஸ்ஸை என்னுடைய போளூர் தொகுதியிலே கனியாம்பாடி ஒன்றியத்திலே மோத்தக்கல் என்ற கிராமத்திற்கும் வாழியூர் கிராமத்திற்கும் விட்டிருக்கிறார்கள். ஆகவே, அப்பகுதி மக்களுடைய எண்ணங்களை நிறைவேற்றும் முகத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த சின்னபுத்தூர் கிராமத்திற்குத் தேவையான ஒரு பேருந்தை இயக்கினால் அந்த இரண்டு பகுதி மக்களும் ஒன்றாகிவிடுவார்கள். எனவே, அந்தப் பேருந்தை இயக்கி, இந்த 22, 24 வாழியூர் மற்றும் தனியாக சின்னப்புத்தூருக்கு தனி பேருந்தை இயக்க முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 12.55

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளை ஏற்று, இன்று காலையிலிருந்து மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் அரசு, அங்கே பேருந்துகளைத் தனியாக இயக்கிக் கொண்டிருக்கிறது.

திரு.தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த பஸ்ஸை இயக்குவதற்கு ஆவன செய்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் அரசுக்கும், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. என். பன்னீர் செல்வம், இருக்கையில் இல்லை.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
TRUTH ALONE TRIUMPHS